**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 135/2020</u>**

நாள் 11.11.2025

DW3 – சண்முகசுந்தரம்

த/பெ – லேட்.முத்துமலை கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of November 2025)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கில் 6–ம் பிரதிவாதி சுப்பராயன் எனக்கு உறவினர், அவர் எனது பெரியப்பாவின் பெண்ணை திருமணம் முடித்துள்ளார். 6–ம் பிரதிவாதி சுப்பராயன் மண்ணரை பஞ்சாயத்து தலைவராக இருந்து வந்தார். வாதியின் தகப்பனார் பழனிச்சாமி கவுண்டரின் மாப்பிள்ளையான வாதியின் கணவரை பற்றி எனக்கு தெரியாது. அந்த பழனிச்சாமி கவுண்டருக்கு தாவா சொத்து பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது. அந்த பூர்வீக சொத்தை பொறுத்து பழனிச்சாமி கவுண்டர் உயில் எழுதி வைக்க உரிமை கிடையாது என்றால் பெண்களுக்கு எல்லா சீர்களும் அவர் செய்து விட்டதால் அவருக்கு உயில் எழுதி வைக்க உரிமை வந்து விட்டது. மேற்படி பழனிச்சாமி என்பவரும், பழனிச்சாமி கவுண்டர் என்பவரும், இந்த வழக்கின் வாதி பாப்பாத்தியின் அப்பாவை தான் குறிக்கும் என்றால் சரிதான். நான் சொல்வது போல பழனிச்சாமி அவரது மகள் பாப்பாத்திக்கு எந்தவொரு சீரும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. 4,5 பிரதிவாதிகளின் பெற்றோர்கள் இறந்த தேதி எனக்கு தெரியாது. 03.11.2005–ம் தேதியில் பாகப்பிரிவினை மற்றும் கிரைய பத்திரம் ஏற்பட்ட போது 6–ம் பிரதிவாதி சுப்பராயன் தான் விபரங்களை சொன்னார். அப்போது நானும் இருந்தேன், 1–ம் பிரதிவாதியும் இருந்தார். அந்த

ஆவணங்களை பத்திர எழுத்தர் காந்தி என்பவர் தான் தயார் செய்தார். அந்த பத்திர எழுத்தர் காந்தியின் அலுவலகமானது ஊத்துக்குளி ஈஸ்வரன் கோவில் அருகில் உள்ளது. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டி 6–ம் பிரதிவாதி தான் என்னை அழைத்தார். 03.11.2005–ம் தேதியிட்ட பாகப்பிரிவினை மற்றும் கிரைய பத்திரம் ஏற்பட்ட போது வாதியின் தகப்பனார் பழனிச்சாமி உயிரோடு இருந்தார் என்றால், அவர் ஏற்கனவே இறந்துபோய்விட்டார். அந்த வாதியின் தகப்பனார் பழனிச்சாமி 21.08.2007–ம் தேதியில் தான் இறந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 03.11.2005–ம் தேதிக்கு முன்பாகவே பழனிச்சாமி இறந்து போய்விட்டார் என்று நாங்கள் சொல்வதற்கு ஆதரவாக எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பழனிச்சாமி உயிரோடு இருந்து வருகிறார் என்பதை அந்த ஆவணங்கள் ஏற்பட்ட போதே நாங்கள் தெரிந்து கொண்டோம் என்றும், அதை வெளிப்படுத்தினால் மேற்படி இரண்டு ஆவணங்களும் செல்லாததாகிவிடும் என்பதால் அந்த ஆவணத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்.

3. வாதியின் தாயார் பெயர் பொன்னம்மாள் என்றால் சரிதான். 6–ம் பிரதிவாதி நடத்தி வரும் தனியார் பள்ளி அருகிலேயே அவர் கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்து உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் பெற்ற இடத்தை ஒட்டினார் போல் அந்த பள்ளியின் விளையாட்டு மைதானம் உள்ளது. 01.03.2004–ம் தேதியில் பழனிச்சாமி உயில் எழுதி வைத்ததாக சொல்லப்படும் விபரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது. 6–ம் பிரதிவாதி சொத்தின் ஒரு பகுதியை மட்டும் தான் கிரையம் பெற்றுள்ள நிலையில் அந்த சொத்தின் அசல் உயில் ஆவணத்தை 6–ம்

பிரதிவாதி வசம் ஒப்படைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்றால் அது எனக்கு தெரியாது. 6–ம் பிரதிவாதி நடத்தி வரும் தனியார் பள்ளியின் பெயர் ஆலயா அகாடமி, மாண்டசேரி சிபிஎஸ்இ பள்ளி என்றால் சரிதான். பூர்வீக சொத்தை பொறுத்து பழனிச்சாமி உயில் சாசனம் எழுதி வைக்க முடியாது என்றும், அதன்பேரில் 1–ம் பிரதிவாதி அவருடைய தகப்பனார் பழனிச்சாமி உயிரோடு இருக்கும் போதே அந்த உயில் சாசனத்தை அடிப்படையாக கொண்டு பழனிச்சாமி பாகத்தை சேர்த்து 2/3 பங்காக 1–ம் பிரதிவாதி தனது பாகமாக ஒதுக்கி கொண்டுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல.

4. பழனிச்சாமிக்கு பாப்பாத்தி என்ற மகள் இருப்பது நான் அந்த ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்த போதே எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த விபரம் 6–ம் பிரதிவாதிக்கும் தெரியும். 03.11.2005–ம் தேதிக்கு முன்பாக பழனிச்சாமி சொத்துக்களை பொறுத்து எந்தவொரு பாகப்பிரிவினையும் நடக்கவில்லை என்றால் சரிதான். அதனால், பழனிச்சாமி அவரது மகளான வாதி பாப்பாத்தியை விட்டு விட்டு பாகப்பிரிவினை பத்திரம் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. மற்றொரு சாட்சியான நாச்சிமுத்து என்பவரை எனக்கு தெரியாது, ஆனால் 6–ம் பிரதிவாதிக்கு தெரியும். 6–ம் பிரதிவாதிக்கு அந்த நாச்சிமுத்து என்ன உறவுமுறை என்று எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 12–ல் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யான சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல. 6–ம் பிரதிவாதி சுப்பராயன் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முழுவதிலும் வாதியும், 4,5 பிரதிவாதிகளும் கூட்டுசுவாதீன அனுபவத்தில் இருந்து தான்

அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு 4,5 பிரதிவாதிகள் பெயரும் கூட்டுப் பட்டாதாரர்களாக இருந்து வருகிறது என்றால் சரிதான். 6–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 40 சென்ட்டுக்கு உட்பிரிவு செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 6–ம் பிரதிவாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், 6–ம் பிரதிவாதி சொன்ன விபரங்கள் அடிப்படையில் தான் எனது பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால், என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.11 12:32:32 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**